24th February 1969]

(*b*) whether the reduction in the number of periods for physical education has been quoted in the notices as reason for such termination; and

(*c*) if so, the relief proposed by the Government in the matter?

மாண்புமிகு திரு எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை. ஏனெனில் வழங்கப்பட்ட வேலை நீக்க அறிவிப்புகள் திரும்பப் பெறப்பட்டன.

Periyar Waters

* 32 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) when an agreement was signed between the Governments of Tamil Nadu and Kerala in connection with the Periyar water which enriches Madurai district;

(*b*) whether any new agreement was signed for electricity; and

(*c*) the duration of the agreement and annual payment to the Government of Kerala therefor?

பெரியாறு தண்ணீர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தை வளப்படுத்தும் பெரியாறு தண்ணீர் சம்பந்தமாக தமிழக சர்க்காருக்கும், கேரள சர்க்காருக்கும் எப்பொழுது ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது ?

(இ) மின்சாரத்திற்காக மீண்டும் புது ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதா ?

(உ) எத்தனை ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செல்லும் ? கேரளாவுக்கு இதற்காக நாம் கொடுக்கும் பணம் ஆண்டுக்கு எவ்வளவு?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாஷா : (அ) தமிழ்நாடு அரசாங்கத்துக்கும் முன்பிருந்த திருவாங்கூர் அரசாங்கத்துக்கும் இடையே பெரியாறு ஏரி குறித்த ஒப்பந்தம் 29—10—1886-ல் செய்து கொள்ளப்பட்டு 1—1—1886 முதல் செயலாக்கப்பட்டது.

(இ) மின்சார உற்பத்திக்கும் பெரியாறு நீரைப் பயன்படுத்த 1949, ஜுன் திங்களில் ஒப்பந்தம் ஏற்பட்டது; இந்த ஒப்பந்தத்தையொட்டி, பெரியாறு, நீர் மின்சாரத்திட்டத்திற்கு 1954, நவம்பரில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. இத்திட்டம் முடிவுற்று மின்சார உற்பத்தி பணி 12—10—1958 முதல் தொடங்கப்பட்டது.

[24th February 1969

(உ) இந்த மூல ஒப்பந்தம் 999 ஆண்டுக் கால அளவிற்கு ஆகும். மூல ஒப்பந்தம் செயலில் இருக்கும் வரையில் துணை ஒப்பந்தமும் செயலில் இருக்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட பகுதிக்கான வாடகை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40,000 ஆகும். மின்சார உற்பத்திக் காரியத்திற்காக கீழ்க்கண்ட விதங்கள் வரையறுக்கப்பட்டன.

(1) 3,500 லட்சம் யூனிட்டுகள் வரையில் ரூ. 12 கிலோவாட் ஒன்றுக்கு (ஆண்டுக்கு).

(2) 3,500 லட்சம் யூனிட்டுக்கு மிகைப்பட்ட ரூ. 18 கிலோ வாட் ஒன்றுக்கு (ஆண்டுக்கு).

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, பெரியாறு தண்ணீர் ஒப்பந்தம் செய்யும்போது பெரியாறிலிருந்து வருகின்ற கிளை ஆறுகளின் தண்ணீரும் நமக்கே சொந்தம் என்று ஒப்பந்தம் செய்ததாகத் தெரிகிறது. இப்போது அதற்கு மாறாக கேரள அரசாங்கம் அப்படி நமக்கு வருகிற தண்ணீரைக் கொண்டு போகிறார்கள் என்று கூறப்படுகிறதே அதை இந்த அரசாங்கம் பரிசிலனை செய்ததா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அதுபற்றிய தகவல் இல்லை.

Ayyanar Spinning Mills, Virudhunagar

* 33 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there was any strike in the Ayyanar Spinning Mills, Virudhunagar, from 11th February 1968; and

(b) the conciliation proceedings taken by the Tamil Nadu Government?

விருதுநகர் அய்யனர் நூற்பு ஆலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விருதுநகர், அய்யனர் நூற்பு மில்லில் 11—12—1968 முதல் வேலை நிறுத்தம் நடந்ததா?

(இ) தமிழக அரசு சமரசம் செய்து வைக்க எடுத்த முயற்சிகள் யாவை?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : (அ) ஆம்.

(இ) தொழிலாளர் துறை மேற்கொண்ட உடன்பாட்டு முயற்சிகள் முறிவடைந்ததால், இத்தகராறு தொழில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டது; தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்வதையும் அரசு தடை செய்தது. 1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 4-ம் நாள் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.